Registered as as News Paper பக்கங்கள் 08 விலை ரூபா 5-00

Nallur Branch Library

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 3 (16.4.94) சனிக்கிழமை ஓசை 57

## வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 5000 ஆசிரியர் வெற்றிடங்கள்

வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகள் பலவற்றில் ஆங்கில, கணித விஞ்ஞான ஆசிரியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இம்மாகாணத்தில் மொத்தம் 5072 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. மாகாண கல்வியமைச்சின் செயலாளர் வோல்டர் நாணயக்கார இம்மாகாண ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைகள் பற்றிய தரவுகளை சேகரித்துள்ளார். கணனி முறைப்படுத்தப் பட்ட இத்தரவுகளின்படி வடக்கு - கிழக்கு மாகாணம் 18,880 சதுர கிலோ மீற்றர் எல்லையை விஸ்தீரணமாகக் கொண்டுள்ளது. இம்மாகாணத்தில் 72 கோட்டங்களுடனான 10 கல்வி வலயங்கள் உள்ளன.

(6ஆம் பக்கம் பார்க்க)

# தென்மராட்சி பகுதியில் விமானக் குண்டு வீச்சு!

## குடியிருப்புப் பகுதியில் தாக்குதல்

[தென்மராட்சி]

தென்மராட்சி பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் நேற்று மக்கள் குடியிருப்பு பகுதிமீது கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன. சிறிலங்கா விமானப்படையினரின் இரண்டு 'புக்காரா' விமானங்கள், இரு உலங்குவானூர்திகள், ஒரு சியாமாச்செட்டி விமானம் என்பன இக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன. இரு வெவ்வேறு இடங்களில் இக்குண்டுவீச்சு மற்றும் ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவை தென்னந் தோட்டங்களிலும் வெற்று நிலங்களிலும் வீழ்ந்து வெடித்தன.

நேற்று நண்பகல் 12-45 மணியளவில் தெற்கிலிருந்து வந்த இரு புக்காரா விமானங்கள் கொடிகாமம் நகரை அண்டிய பகுதிகளில் தாக்குதலைத் தொடங்கின.

முதலில் கொடிகாமம் மந்துவில் கிராமப் பகுதியில் ஐந்து குண்டுகள் வீசப்பட்டன. இதன்போது அங்கு தோட்டமொன்றில் நாட்டப்பட்டிருந்த மரவள்ளி, மிளகாய் போன்ற பயன்தரு பயிர்களும் மரங்களும் அழிந்தன.

முதலில் இரு புக்காரா விமானங்கள் இப்பகுதியில் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின. பின்னர் அன்றில் ...

புக்காரா விமானமும் ஒரு சியாமாச்செட்டி விமானமும் உலங்குவானூர்திஒன்றும் அப்பகுதியில் தாக்குதலைத் தொடர்ந்தன.

பின்னர் இவை அல்லாரைப் பகுதியில் குடியிருப்புகள் மீது தாக்குதலை நடத்தின. மேலும் விமானத்திலிருந்து நடத்தப்பட்ட ரொக்கெட் வீச்சினால் இரு வீடுகள் சேதமடைந்தன. இத்தாக்குதல்கள் 20 நிமிடங்களுக்கு மேல் நீடித்தன. (86)

## தொழிலாளர் பலி

(யாழ்ப்பாணம்)

சில்லாலையில் நேற்று முன்தினம் சீவல் தொழிலில் ஈடுபட்டிருந்த ஒருவர் இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்காகி மரணமடைந்தார்.

பண்டத்தரிப்பிலிருந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச் சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஆயுத வியாபாரத்தை கட்டுப்படுத்த வேண்டும்

### மதத்தலைவர்கள் உலக நாடுகளிடம் கோரிக்கை

சர்வதேச அளவிலான ஆயுத வியாபாரத்தைக் கடுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கிறிஸ்தவ மதத்தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் ஜேர்மனியின் கிறிஸ்தவ மதத் தலைவர்களே இவ்வாறு கோரியுள்ளனர்.

தற்காப்புக்கான உரிமையை ஏற்கும் அதேவேளை, கேட்கும் அனைவருக்கும் ஆயுதங்களை விற்க வேண்டிய உரிமை ஆயுதம் உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு இல்லை என்று பெல்ஜியத்தில் பிரஸ்ஸில் கூடிய கத்தோலிக்க, அங்கிலிக்கன், மற்றும் லூதரன்ஸ் திருச்சபை பிரதிநிதிகளின் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

## கொழும்பு நகரில் ஆட்சேர்ப்பு விடுதலைப் புலிகள் முயற்சி

### இரகசிய பொலிஸார் தெரிவித்ததாக ஐலண்ட்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தமது ஆட்சேர்ப்பை தற்போது கொழும்பு நகரிலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் நடாத்தி வருவதாக மூத்த பொலிஸ் அதிகாரிகளை மேற்கோள் காட்டி ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கொழும்பில் தமது ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்காக தெரிவு செய்யப்பட்ட சிலரைக் கொண்டு ஒரு குழுவை அமைத்துள்ளதாகவும் இக்குழு விடுதலைப் புலிகளுக்காக கொழும்பில் செயற்படக்கூடிய ஆட்களை இயக்கத்தில் சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளி கொழும்பில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புகளின் போது கொல்லப்பட்ட அன்ரனி அருள்தாசும் இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரு நபரெனவும் ஆட்சேர்ப்பிற்கென பெருமளவு பணமும் புலிகளால் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேர்த்துக் கொள்ளப்படுபவர்களின் ஆற்றலுக்கு ஏற்ப பணிகள் ஒதுக்கப்படுவதாக பொலிசார் நம்புவதாகவும் ஐலண்ட் மேலும் தெரிவித்துள்ளது.

## அடுத்த தேர்தலில் போட்டியிட அத்துலத்தின் மனைவி தயார்

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் போது சிறிமானி அத்துலத்முதலி போட் ...

எல். மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற லலித் குழுவின் ...

இருக்கும் வரை இவருக்கு கட்சி ரீதியாக போட்டியிட அனுமதி வழங்கமாட்டார் என்றும் ஆகவே அவ்வாறான ...

## குருநகரில் ஷெல்வீச்சினால் காயப்பட்டோர் 18 ஆக உயர்வு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ...

தர்சன் (ஐந்து மாதம்), யோசேப் கேரிவம்மை (வயது 58), மேரி தெரேசா (வயது ...

36), மங்கனேஸ்வரி (வயது 38), இம்மானுவல் செபமாலை (வயது 51), இம்மா ...

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின்போது சிறிமானி அத்துலத்முதலி போட்டியிட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் எந்தக் கட்சியில் போட்டியிடுவது என்பதே இன்று உள்ள பிரச்சினையாக இருப்பதாக

எல். மோ பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற லலித் குழுவின் கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் இக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திர

இருக்கும் வரை இவருக்கு கட்சி ரீதியாக போட்டியிட அனுமதி வழங்கமாட்டார் என்றும் ஆகவே அவ்வாறான சமயத்தில் இவர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்மாகாண சபை தேர்தலின்போது இவர் தமது உறுப்பினர்களை ஆதரித்து பகிரங்கப் பொதுக்கூட்டங்களில் உரையாற்றியதாகவும் இதில் வெற்றி கண்டதைத் தொடர்ந்து இம் முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

## 'றுகுணு' கப்பலில் வந்த சைக்கிள் குறித்து சந்தேகம்

(வடமராட்சி)

யாழ். தனியார் ஒருவருக்கு 'றுகுணு' கப்பலில் ஏற்றி வந்த துவிச்சக்கரவண்டி விடயத்தில் கடற்படையினருக்கு எழுந்த சந்தேகத்தை அடுத்து இக்கப்பல் மீண்டும் கொழும்பு துறைமுகத்திற்கு மீள அழைக்கப்பட்டது.

கொழும்பு துறைமுகம் சென்ற இக்கப்பலில் இருபது கடற்படையினர் சோதனையிடுவதற்காக ஏறியதாகவும், கப்பல் கப்டனுடன் துவிச்சக்கரவண்டி விடயமாக வினவப்பட்டதாகவும் தெரிய வருகிறது. கப்பல் கப்டன் திரு. அல்விராசா சோதனையிடுமாறு படையினரிடம் கூறியபோது உயர் அதிகாரி ஒருவர் திடீரென கப்பலுக்குள் வந்து சோதனையிட வேண்டாமெனக்கூறிப்பலவ

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாகோ, றுகுணு கப்பல்கள் பருத்தித்துறைக்கு வந்தன

(வடமராட்சி)

கொழும்பில் இருந்து புறப்பட்ட 'மாகோ' 'றுகுணு' கப்பல்கள் இரண்டும் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தன.

'றுகுணு' கப்பலில் தனியாருக்கு 4800 பைக்கட் உரவகைகள் மற்றும் 550 கட்டு ரயர் ரியூப் வகைகளும், ஆர். டி. ஏச். எஸ்ஸிற்கு மருந்து வகைகள், யாழ் மாநகர சபைக்கு எரிபொருள், சமூகநல சேவை திணைக்களத்திற்கு 5618 பைக்கட் உரவகைகள், சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 30 துவிச்

(6ஆம் பக்கம் பார்க்க)

## குடும்ப அட்டைக்கு 2 லீற்றர் மண்ணெய்

(யாழ்ப்பாணம்)


குடும்ப அட்டை ஒன்றிற்கு இரண்டு லீற்றர்வீதம் 14-வது சுற்று மண்ணெய் திங்கள் முதல் விநியோகிக்கப்படும் என யாழ் செயலக புனர்வாழ்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது 'மாகோ' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ள மண்ணெய்யே லீற்றர் 25 ரூபா வீதம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி, அச்சுவேலி, புலோலி, பருத்தித்துறை, உடுப்பிட்டி, கட்டைவேலி,

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



### கப்டன் அறிவு

யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தொன்றில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் அறிவு (வேலும் மயிலும் வேக்ராஜ், சுப்பர்மடம், பருத்தித்துறை) என்ற போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

முதலில் இரு புக்காரா விமானங்கள் இப்பகுதியில் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின. பின்னர் அன்றிரவு ஒரு புக்காரா விமானம் திரும்பிச் சென்றவுடன் மற்றைய

## குண்டு வெடித்து சிப்பாய் பலி

(கொழும்பு)

தலையணைக்கு அருகே கிரனேட்டுடன் படுத்த இராணுவச் சிப்பாய் அது வெடித்ததில் உடல் சிதறிப் பலியானார். அருகில் படுத்திருந்த மேலும் இருவர் படுகாயமடைந்தனர். இலவன்குளம் இராணுவ முகாமில் இச்சம்பவம் நடந்தது.

இறந்த சிப்பாயின் உடல் உறுப்புகள் பல அடி தூரத்தில் சிதறிக்கிடந்தன.

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் குருநகர் பகுதி மீது மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலுக்கு காயமடைந்தோர் தொகை 18 எனதெரிய வந்துள்ளது.

தமிழ்புத்தாண்டு தினமான நேற்று முன்தினம் இப்பகுதி மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலுக்கு ஒருவர் பலியானது தெரிந்ததே.

இதேவேளை காயமடைந்தவர்கள் பலர் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளதுடன் சிலர் நேற்று யாழ். போதனா மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றனர். அமல உற்பவி (வயது 29), அவரது மகனான பிரிய தர்சன் (ஐந்து மாதம்), யோசேப் மேரியம்மை (வயது 58), மேரி தெரேசா (வயது 16), ஜூலிகமேரி (வயது 48), எஸ். திரேசம்மா (வயது 57), லோகநாதன் குலேந்திரன் (வயது 12), பயஸ்ராஸ் கிறிஸ்ரீன் அம்மா (வயது 47), பயிரான் உதயன் வயது (18), புனிந்திரன் மரியராணி (வயது 36), தங்கலேஸ்வரி (வயது 38), இம்மானுவல் செபமாலை (வயது 51), இம்மானுவல் மேரி கனிஷ்டா (வயது 18), ஜெயராசா மெற்றில்டா (வயது 24) ஆகியோரும் காயமடைந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி வடக்கில் அவ்ரோ விமானக் கண்காணிப்பு நோட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் குண்டு வீச்சு விமானம் ஒன்று தொடர்ச்சியாக பதினொரு தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டது.

ஆனையிறவு பக்கமாக இருந்து வந்த "புக்காரா" விமானம் நேற்றுக் காலை 6.45 மணியளவில் பருத்தித்துறை கடற் பகுதியை முதலில் இரண்டு தடவைகள் வட்டமிட்ட பின்னர் தொண்டமானாறு, வல்வெட்டித்துறையையும் இணைத்து வட்டமிட்டது. சுமார் 7 10 மணிவரையில் இடைவிடாது வட்டமிட்டுவிட்டு பலாலி நோக்கிச் சென்றது.

இவ் விமானம் வட்டமிட்டுக் கொண்டிருந்தபோது காங்கேசன்துறையிலிருந்து 'மாகோ' கப்பலும் கொழும்பிலிருந்து புறப்பட்ட 'றுகுணு' கப்பலும் பருத்தித்துறை துறைமுகத்தை நெருங்கிக் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(யோ)

## மேநாளை சிறப்பாக முன்னெடுக்கும் ஏற்பாடுகளில் வெகுஜன அமைப்புகள்

இவ்வருடத்தில் மேநாளை சிறப்பாக, எழுச்சியாக முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை வெகுஜன அமைப்புகளும் தொழிற்சங்கங்களும் அரச கூட்டுறவு, தனியார் துறையினரும் செய்து வருகின்றனர். கடந்த வார இறுதியில் எட்டிய தீர்மானங்களுக்கேற்ப செயற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

மேநாள் எழுச்சியின் மேன்மையை வெளியிட பொருத்தமான கருத்தரங்குகள், கலை வடிவ ஏற்பாடுகளை வெகுஜன அமைப்புகளே தாமாகவே முன்னெடுக்க வேண்டும் என்ற விருப்பார்வம் இம்முறை காணப்படுகிறது. கருத்தரங்குகளையும் கலைவடிவ வெளிப்பாடுகளையும் தாமே ஒழுங்கமைத்து, வடிவமைத்து நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெரும் படையெடுப்பை நடத்தி தமிழீழ மக்களை, வளங்களை அழித்துவிட சிறிலங்கா பேரினவாத அரசு திட்டமிட்டுள்ள இவ்வேளையில் சுதந்திரமான கௌரவமிக்க வாழ்நிலையை நிர்ணயிக்க தமிழீழ மக்கள் ஆற்றல் கொண்டுள்ளவர்கள் என்பதை இவ்வருடத்தைய மேநாள் எழுச்சி வெளிக்கொணரும்.

நடத்தப்படவுள்ள பேரணியும், அணிவகுப்பும் நம்மை நாமே காப்பாற்றிக் கொள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. உறுப்பினர்கள் வெளிநாடு செல்லத் தடை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

டிசம்பரில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் வரை ஐக்கிய தேசியக் கட்சி எம். பிகள் வெளிநாடு செல்ல வேண்டாம் என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா நேற்றுக் கேட்டுக் கொண்டார். இந்தத் தடை அடுத்த மாதத்திலிருந்து அமுல்படுத்தப்படவுள்ளது. தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபடவே அவர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# வரி விளம்பரம்


**கோல்டன் கொமட் குஞ்சு விற்பனை**

கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகள், கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு; "மல்லிகாபதி" சந்தைகிழக்கு ஒழுங்கைமானிப்பாய். (8000)

**பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு**

கைவலன் பிறவுண் ஒரு மாதம்வளர்ச்சியடைந்தபேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (8001)

**விற்பனைக்கு**

அமெரிக்கன் பிராமாஸ், பஸ்ரம், காப்பிலி, வாக்வோ ழிக் குஞ்சு, வெள்ளாடுகள், பாமான கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு; தொடர்பு இ. சுதாகரன் இல; 20 அரசடி நல்லூர் 2-ம் ஒழுங்கை (நேதாஜி ஒழுங்கை); (8048)

**யாழ். ஸ்ரீதர் திரையில்**

தினசரி 2-30, 6-00 சனி, ஞாயிறு 10-30, 6-00 மதுரை வீரன்; சனி, ஞாயிறு 2-30 ஒளிவீச்சு. (இ-9164)

**பெண் லிகிதர் தேவை**

கோப்பாயில் இயங்கிவரும் "கெயின்ஸ்" தனியார் கல்வி நிறுவனத்திற்கு பெண் லிகிதர் ஒருவர் தேவைப்படுகிறார்; 17-4-94 (ஞாயிறு) மாலை 3 மணிக்கு "கெயின்ஸ்" கல்வி நிலையம், கிறிஸ்தவ கல்லூரி முன்பாக, கோப்பாய் எனும் முகவரியில் நேரில் சமுகமளிக்கவும். (இ-9163)

**வியாபாரிகட்கு**

தரமான இமிரேசன் கோல்ட் கவரிங் சோடனை நகைகள், லேஸ், நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு, உள் நாட்டு அழகு சாதன பொருட்களைநிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக்கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177 A, மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம். (இ-9071)


## கமக்காரர் அறிமுக அட்டை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்து அவர்களை விவசாயத்தில் ஊக்கப்படுத்தும் நோக்கில் "கமக்காரர் அறிமுக அட்டை" வழங்கும் திட்டம் ஒன்றினைச் செயற்படுத்தி வருகின்றது. யாழ்; மாவட்டத்தில் இவ்வாண்டு மாசி மாதம் வரை 35,000 விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் கடந்த மாசி மாதம் இறுதி வரை 24,922 விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தியாக்கப்பட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவை அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியானவர்களுக்கு "கமக்காரர் அறிமுக அட்டைகள்" வழங்கப்படும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சிவபூரணி
**முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை**
**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலையினால் 14-04-94 அன்று நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.

1-ம் பரிசு இல; 2731
2-ம் பரிசு இல; 1261
3-ம் பரிசு இல; 212

ஆறுதல் பரிசுகள்
(1) இல. 2731
(2) இல; 815
(3) இல. 885
(4) இல; 1259
(5) இல; 1718

மே மாதம் 1-ம் திகதிக்கு முன்பாக பரிசில்களை உரிய ஆதாரத்துடன் பெற்றுக்கொள்ளவும்;

(8051) — மன்ற அதிபர்

## கண்ணீர் அஞ்சலி

கிளிநொச்சி வாழ் மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம்பெற்று அன்புடனும் ஆதரவுடனும் எம்மையெல்லாம் அரவணைத்து சேவையாற்றிய கரைச்சிப் பிரதேசச் செயலாளர் செல்வி இந்துமதி நாகலிங்கம் அவர்களுக்கு எமது கண்ணீர்ப்பூக்களை அஞ்சலியாக்குகின்றோம்.

கிராம சேவையாளர் சங்கம்
கிளிநொச்சி மாவட்டம்
(8045)

மேலைப்புலோலி
**சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை**
**87-வது ஆண்டு**
**நினைவு விழா**

16. 04. 94 (இன்று) மாலை 6 மணி
சதாவதானி அரங்கு (சனசமூக நிலைய முன்றல்)
முதன்மை விருந்தினர்;
திரு. ஆ. சிவசுவாமி அவர்கள்
(பிரதேச செயலரும் மேலதிக அரச அதிபரும் வடமராட்சி வடக்கு)

தலைவர்: திரு. அ. துரைசிங்கம் (நிலையத் தலைவர்)
- சதாவதானி கதிரைவேற்பிள்ளை நினைவுப் பேருரை
- இலக்கியப் பேருரை
- கவியரங்கம்; தலைப்பு - "கேளுங்கள் தரப்படும்"
- போட்டிகளில் முதலிடம் பெற்ற பேச்சுக்கள், பரிசில் வழங்கல்
- சிறுவர் சிறுமியர் கலை நிகழ்ச்சிகள்
- நாமகள் கலாமன்றம் வழங்கும் "பாசத்திற்கோர் பரதன்" (நாடகம்)

ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்
அனைவரும் வருக.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை, க. இராமச்சந்திரன்
சனசமூக நிலையம், செயலாளர்
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

விளம்பர அன்பளிப்பு;
நேரு படப்பிடிப்பாளர்
சாலையை
(சி-9165) புலோலி மேற்கு, பருத்தித்துறை;

கோப்பாய் வடக்கு சனசமூக நிலைய வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்பட்ட
**அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்**

1ம் பரிசு இலக்கம் 212
2-ம் பரிசு " 180
3-ம் பரிசு " 1785

10 ஆறுதல் பரிசுகளின் சீட்டு இலக்கம்
2063, 981, 2041, 510, 449, 1658, 1282, 967 1488, 695

மேற்படி பரிசுகளை உரியவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் 15-5-94 க்கு முன்பு பெற்றுக்கொள்ளவும்
தொடர்பு:- திங்கள், வெள்ளி தினங்களில் பிற்பகல் 4 - 6 வரை

(8053) - நிர்வாகம்.

# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

### தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் 20-04-94 புதன்கிழமை அன்று ஆரம்பமாகின்றன

**01. COMPUTER PROCESSING COURSES:**

**I- Beginner's Computer studies:**
- Introduction to Computers, DOS, Programming in BASIC Language — Duration : 4 months

**II. Advanced Computer Studies:**
- DOS, Programming in BASIC Language, Word Processing. Advanced BASIC — Duration : 6 months

**III. Diploma in Computer studies:**
- DOS, Programming in BASIC Language, Word Processing, Systems analysis and Design LOTUS 1 - 2 - 3 — Duration : 9 months

Lectures By : S. R. Logendra (D C A), (systems analyst)

Equipment used : LASER XT/2 XT/3 386 and BITCOM

**06. SHORT HAND AND TYPING** (English)

**07. GENERAL MOTOR MECHANISM**
மோட்டார் வாகனங்கள் திருத்துதல்

(மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் பம்பி, ஜெனரேற்றர், கார், லொறி என்ஜின்கள்) (பெற்றோல், டீசல் யாவும்)
- Petrol Engine : Ignition system, Operation maintenance and Care. Engine Overhaul and time setting
- Diesel Engine : (Fuel Injector system, design and Operational details)

அத்துடன் மோட்டார் வாகனங்களின் மின்சார உபகரணங்களைப் பழுதுபார்த்தலும்; மின்னேற்றலும், மின்சார இணைப்பும்

Lectures By : Mr. A. S Gunaseelan (Automobile Engineer) — Duration : 6 months

**08. ELECTRICAL WIRING**
மின்சார இணைப்பு


## நினைவு கூருகின்றோம்...

**1994-04-16**

1985-ம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் எதிர்பாராதவிதமாக வாகனத்துடன் வெடித்ததில் எம்மைப் பிரிந்த,
**அன்பு** (முத்ததம்பி தனபாலசிங்கம்-முள்ளியான், வெற்றிலைக்கேணி-யாழ்)

1986-ம் ஆண்டு யாழ்-நாவற்குழியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
**முரளி-கமல்** (நமசிவாயம் கமலநாதன் நுணாவில் மேற்கு-சாவகச்சேரி)

யாழ் பருத்தித்துறையில் காவலரண் அமைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,
**புவீ பொட்ஸ்** (சேதுதாயகம் ரவீந்திரராசா-புலோலிகிழக்கு-பருத்தித்துறை-யாழ்)

❋ **Lectures By : S. R. Logendra (D C A), (systems analyst)**

ஃ Equipment used : LASER XT/2, XT/3, 386 and BITCOM Computers
(IBM COMPATIBLES), (THEORY & PRACTICALS)

## 02 CIVIL DRAUGHTSMANSHIP AND QUANTITY SURVEYING

ஃ Qualification : G. C. E (O/L) Duration : 6 months

## 03. CITY AND GUILDS OF LONDON EXAM (YEAR 94/95)

ஃ QUANTITY SURVEYING (PART I&II)
ஃ Qualification : G. C. E (O/L) Duration : 9 months

❋ **Lectures By : Mr. S. Ruthiralingam (Chartered Civil Engineer)**

## 04. ENGLISH CLASSES

மிகக் குறுகிய காலப் பயிற்சிகள் நடைபெறும்.
Duration : 4 months

## 05. TOEFL (Test of English as a Foreign Language)

Duration : 4 months

## 08. ELECTRICAL WIRING

மின்சார இணைப்பு

ஃ வீட்டு மின்சார இணைப்பு ஃ தொழிற்சாலை மின்சார இணைப்பு
(Single Phase & Three Phase)

## 09. MOTOR REWINDING

மோட்டார் ரீவைண்டிங்

ஃ அடிப்படை மின்னியல், காந்தம், ஆமேச்சர், மின்மாற்றிகள் Single Phase motor and Fan, Three Phase
ஃ Duration : 4 months

## 10 GENERAL ELECTRICIAN

ஜெனரல் எலெக்றீஷன்

ஃ அடிப்படை மின்னியல் (நேரோட்டம், ஆடலோட்டம்)
ஃ அடிப்படை இலத்திரனியல்
ஃ நேரோட்ட மின்னியந்திரங்கள், ஆடலோட்ட மின்னியந்திரங்கள் (பழுது பார்த்தல், ரீவைண்டிங்)
ஃ வீட்டு மின்சுற்று, வாகனங்களுக்கான மின்சுற்று (அமைத்தல், பழுது பார்த்தல், பாதுகாத்தல்)
ஃ THREE PHASE (மோட்டார்கள், மின் பிறப்பாக்கிகள்)
ஃ குளிர்சாதனப் பெட்டி, காற்றுச் சீராக்கி (AC) மற்றும் பலவகையான மின்சார உபகரணங்களைப் பற்றி அறிதலும் அவற்றைப் பழுது பார்க்கும் முறையும்
Duration 6 months

குறிப்புகள்: அனைத்து வகுப்புகளும வாரநாள், வார இறுதி நாள் வகுப்புகளாக நடைபெறும்.

○ பயிற்சிக் கட்டணங்களை தவணை அடிப்படையில் செலுத்தலாம்.

○ விண்ணப்பப் படிவங்களையும், பாடநெறிகளுக்கான கட்டண விபரம், மற்றும் பாடத் திட்டங்களையும் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு

பதிவாளர்,
**பற்றீஷன் உயர்கல்வி நிறுவனம்**
59, சென்பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**REGISTRAR,**
**PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES**
59, St. Patrick's Road, Jaffna.

(சி-9166)

---

தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**புலி பொட்ஸ்** (சேதுநாயகம் ரவீந்திரராசா- புலோலிகிழக்கு-பருத்தித்துறை-யாழ்)
1988-ம் ஆண்டு மன்னார்-வெள்ளாங்குளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.முரளி** (மரியதாஸ் அன்புமணி-உயிலங்குளம்-மன்னார்)

**லெப்.ஜான்பரீன்** (சின்னையா ஜெயக்குமார்-இராஞ்சி, பூநகரி-மன்னார்)
1989-ம் ஆண்டு கொழும்பில் ஜே.வி.பி குழுவினர் மேற்கொண்ட கைக்குண்டுவீச்சில் கொல்லப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்!
1991-ம் ஆண்டு மன்னார்-அடம்பன், ஆட்காட்டிவெளி பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2ம் லெப்.வைரகன்** (சின்னத்தம்பி விமலேஸ்வரன்-சித்தாண்டி, மொறக்கொட்டாஞ்சேனை)

**இளங்கோ** (தா. மகேசராஜ்-விவேகானந்தாவீதி, புதுக்குடியிருப்பு-மட்டு)
1992-ம் ஆண்டு மாரடைப்பு நோய் காரணமாக எமைப்பிரிந்த,

**மேஜர் வளர்மதி** (சாந்தி செல்லத்துரை-நாகதம்பிரான் வீதி, கன்னங்குடாபுரம்-மட்டு)
பலாலிதரப்பகுதியில் 21-8-92 அன்றுபொறுதுறை குவாட்டல் முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் விழுப்புண்ணடைந்த நிலையில் சிகிச்சைபெற்றுவரும் போது வீரச்சாவெய்திய,

**லெப்.பவளராஜன்- கர்ணன்** (வடிவேல் ரவிச்சந்திரன்-பெரியகல்லாறு-மட்டு)
1993 ம் ஆண்டு இயக்கச்சி புகையிரதவீதிக்கும் பிரதானவீதிக்குமிடையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.அன்பழகன்-இருபன்** (முருகன் ரவி-பெரியபுலோ, நெல்லியான் வீதி, சுழிபுரம்-யாழ்)
சிறிலங்கா இராணுவம் மற்றும் தேசவிரோதிகளால் சுடமுயன்றபோது சயனைட் அருந்தி எமைப்பிரிந்த,

ஆதரவாளர்
**பூபாலசிங்கம் மனோகரன்** (மாமாங்கம்-மட்டு)
மன்னார்-முருங்கன் பகுதியிற் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சில் பலியான பொதுமகன்-

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**
**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9162)

Nalluy Branch Library

# மகாபொல புலமைப் பரிசில்கள் மாவட்ட ரீதியாக வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில்கள் வழங்கும் வைபவம் மே மாதம் ஏழாம் திகதி நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாண்டு நான்கு ஆயிரத்து மூன்றூற்றி ஐம்பத்தி ஒன்பது மாணவர்களுக்கு மேற்படி புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. அந்த அந்த மாவட்டங்களிலேயே புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் நடைபெற இருப்பதாகவும் தெரியவருகின்றது.

மே மாதம் ஏழாம் திகதி காலை ஒன்பது நாற்பத்தி ஐந்து மணிக்கு ஒரே நேரத்தில் இந்நிகழ்வுகள் நடைபெற இருப்பதாகவும் வடக்குகிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நாலூற்றி நாற்பத்தி ஐந்து பேர் மகாபொல புலமைப்பரிசில்களை பெற தகுதியுடையவர்கள் என்றும் இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அறுபது மாணவர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் பதினொரு மாணவர்களும் மன்னார் மாவட்டத்தில் இருபத்தியொரு மாணவர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதினாறு மாணவர்களும் வவுனியா மாவட்டத்தில் முப்பத்தி நான்கு மாணவர்களும் மேற்படி மகாபொல புலமைப்பரிசில்களை பெற தகுதியுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் எண்பத்தியொரு மாணவர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் தொண்ணூறு மாணவர்களும், அம்பாறை மாவட்டத்தில் நூற்றி இருபத்திஆறு மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (நி)

## உள்ளூர் வளங்கள் மூலம் ஈஸ்ட் தயாரிப்பு முயற்சி

பாண், கேக் போன்ற உணவுப் பண்டங்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஈஸ்ட் (மதுவம்) என்னும் பொருளை உள்ளூர் மூலவளங்களிலிருந்து உற்பத்தி செய்வதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த முயற்சி வெற்றிகரமான பெறுபேறுகளைத் தந்துள்ளது.

இதன் தொடர் நடவடிக்கையாக வர்த்தக ரீதியில் ஈஸ்ட் (மதுவம்) உற்பத்தி செய்வது பற்றி ஆராயப்பட்டு வருகின்றது.

உள்ளூர் மூலவளங்களிலிருந்து ஈஸ்ட் (மதுவம்) தயாரிப்பதன் மூலம் தமிழீழத்தில் இருந்து வெளிச் செல்லும் பணத்தில் கணிசமான தொகையினை மீதப்படுத்துவதோடு பலருக்கு வேலைவாய்ப்பையும் அளிக்கமுடியும்.

## கிளிநொச்சிப் பகுதியில் மாடுகளுக்கு இலக்கமிடுதல்

கிளிநொச்சிக் கோட்டத்தில் மாடுகளுக்கு இலக்கமிடும் திட்டமொன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத் திட்டத்தின் மூலம் சகல ஒரு வயதுக்கு மேற்பட்ட மாடுகளுக்கும் தொடராக இலக்கமிடப்படுகின்றது.

சில குறிப்பிட்ட பாகங்களில் மட்டும் இலக்கத்தைப் பொறித்து கால்நடைகளின் தோலைப் பாதுகாக்க வேண்டியதும் அவசியமாகும். கால்நடை வளர்ப்பில் பக்கவிளைவாகக் கிடைக்கும் தோல் பதனிடப்பட்டு தோற்பொருட்கள் செய்ய பயன்படுத்தக் கூடியதாகும். உள்ளூரில் கிடைக்கும் தோல்களை முற்றுமுழுதாக உள்ளூர் மூலப் பொருட்களையே கொண்டு பதனிடும் ஆராய்ச்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெற்றி அடைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. மாடுகள் களவு போவதைத் தடுக்கவும் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தவும் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவதை ஒழுங்கு படுத்தவும், நோய் மாடுகளை இடத்துக்கிடம் கொண்டு செல்வதை தடுக்கவும் இத் திட்டத்தின் மூலம் வாய்ப்பு ஏற்படும்.

இத்திட்டத்தின் மூலம் தேவைப்படும் தடுப்பூசிகள், மருந்துவகைகள் ஆகியவற்றையும் கணிப்பீடு செய்து பெற்றுக்கொள்ளவும் இலகுவாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கோட்டக்கல்வி அலுவலகங்களில்

## திட்டமிடல் பிரிவுகளை உடன் ஆரம்பிக்க பணிப்பு

(நல்லூர்)

கோட்டக் கல்வி அலுவலகங்களில் இதுவரை திட்டமிடல்பிரிவு ஆரம்பிக்கப் படாமலிருந்தால் அதனை உடனடியாக ஆரம்பிக்குமாறு வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யு டபிள்யு நாணயக்காரா சகலகோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பணித்துள்ளார்.

இத் திட்டமிடல் பிரிவுக்கான பொறுப்பான உத்தியோகத்தராக அலுவலகத்தில் கடமைபுரியும் ஒரு உத்தியோகத்தரை அல்லது கோட்டக் கல்வி அலுவலகத்தில் கடமை புரிய இணைக்கப்பட்டுள்ள ஆசிரியரை நியமிக்கலாம்.

மேலும் கோட்டக் கல்வி அலுவலகங்களின் கீழ் இயங்கும் பாடசாலை அதிபர், ஆசிரியர், பாடசாலைகளில் உள்ள ஏனைய பணியாளர் பதவிகள் தொடர்பான புள்ளிவிபரங்களையும் மாணவர்களுக்கு வழங்கும் சேவைகள் தொடர்பான புள்ளி விபரங்களையும் சேகரித்து கேட்கப்படும்போது உடனடியாக தரவுகளை மாகாண கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப் படக் கூடியவாறு இப் பிரிவு தனது கடமைகளை ஆற்ற வேண்டும் எனவும் அவர் பணித்துள்ளார். (17)

## இரவு நேர வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம், வேலணை நடராசா வித்தியாலயம் என்பவற்றில் தினமும் இரவு நேரத்தில் மாணவர்கள் 'பெற்றோமக்ஸ்' வெளிச்ச வசதியுடன் கல்வி கற்று வருகின்றனர். இரு பாடசாலைகளிலும் சுமார் 225 மாணவர்கள் இவ்வாறு இரவு நேரத்தில் கற்கின்றனர். (22)

* *

(தெல்லிப்பழை)

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் இரவுநேர மீட்டல் வகுப்புகள் (சுய கல்வி) நடாத்தப்படுகின்றன. சங்கரத்தை இந்து மகா வித்தியாசாலையில் நடைபெறும்மேற்படி மீட்டல்வகுப்புக்களில் பெற்றோமக்ஸ் வெளிச்ச வசதியுடன் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த இலவச கல்விச் சேவையினால் பல வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும், ஏனையோருமாக 125 க்கு மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். (41)

## ஆவணத் தொகுப்பு

தென்மராட்சிபகுதியிலுள்ள

தொண்டர் ஆசிரியர்

## நியமனம் கிடைக்காதவர் சந்திக்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

1989-02-01 ஆம் திகதி முதல் சாவகச்சேரி கல்விக் கோட்டப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி இற்றைவரை நிரந்தர நியமனம் கிடைக்காத சகல ஆசிரியர்களும் 1994-04-18 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 10 மணிக்கு கோட்டக்கல்வி அலுவலகத்திற்குசமூகமளிக்குமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் கோரியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் கல்வித்தகைமை, பாடசாலையில் கற்பிக்கும் பாடங்கள், சேவைப்பயிற்சி போன்ற ஆவணங்களை சமர்ப்பிப்பதுடன், பாடசாலை அதிபரின் உறுதியுரைக் கடிதமும் கொண்டுவருதல்வேண்டும்." எனக் கோரப்பட்டுள்ளது (86)

## வன்னிப்பகுதியில் வதிவிட வேளாண்மை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் முத முதல் வன்னி மாவட்டத்திற்கும் விஸ்தரித்துள்ளது.

## கண்ணீர் அஞ்சலி

### திரு. டானியல் அன்ரனி

எமது சமாச களஞ்சியப் பொறுப்பாளர் திரு. டானியல் அன்ரனி அவர்கள் 17-03-94-ம் திகதி மரணமானதையிட்டு அன்னாரது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பதுடன், அவரது மறைவால் துயருறும் அவரது மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், 201, 5-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்சபை, ஊழியர்கள்

(8023)

## 1-ம் ஆண்டுநினைவலைகள்



## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10.05.1933

இறப்பு 26.04.1993

### அட்சயலிங்கம் - சரஸ்வதி

திதி: 16.4.94

அன்புத் தெய்வமே அணையா தீபமே பண்பின் சிகரமே எங்கள் குடும்ப ஒளிவிளக்கே எம்மை பண்போடும் பாசத்தோடும் வாழவைத்த அன்புத் தெய்வமே ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட உங்கள் ஆத்மாசாந்தியடைய இந்நாளில் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

அன்புக் கணவன், அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வயிரமுத்து - அட்சயலிங்கம்
இளைப்பாறிய தபால் அதிபர்
'அட்சயபவன்'
தும்பளைவீதி, பருத்தித்துறை

(8052)

## வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



தோற்றம்: 20-8-1916


மறைவு: 17-3-1994

17-3-94 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வம்

### அமரர் கதிர்காமு கந்தையா

(முன்னாள் ஏழாலை கிராமசபை உபதலைவர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 16-4-94 சனிக்கிழமை காலை 10-00 மணி முதல் 12-00 மணி வரை



## திருமதி கனகரத்தினம் தங்கச்சி அம்மா

மலர்வு
21-03-1924

உதிர்வு
26-04-1993

1-ம் ஆண்டுத் திதி: 16-4-94

எங்கள் அன்பின் திருவுருவே
அறிவின் பொக்கிஷமே
பாசத்தின் உறைவிடமே
தேசத்தின் விளைநிலமே
கற்பின் களஞ்சியமே
பொறுமையில் திருமகளே!

நீங்கள் பிரிந்து ஆண்டு ஒன்று மறைந்தும், உங்களின் நினைவலைகள் மறையவில்லை. ஆழ்ந்த துயரில் ஆழ்ந்து தவிக்கின்றோம். உங்கள் சுந்தர வடிவம் எங்கள் மனத் திரையில் என்றும் நீங்கா ஓவியமாய் அமைந்துள்ளது. உங்கள் இனிய பேச்சு எங்கள் செவிகளில் இனிய கீதமாக ஒலிக்கின்றது. அருமை மகனிடம் அபார பாசம் வைத்து வளமான வாழ்வளித்தீர்கள். அன்பு மருமகளை மகள் போல் மதித்து வாழ்ந்தீர்கள். பேரப்பிள்ளைகளிடம் பிராணனையே வைத்திருந்தீர்கள். உற்றார் உறவினருக்கு உற்ற துணையாக விளங்கினீர்கள். உங்களை இழந்த தெய்வமாகக் காலமெல்லாம் போற்றிடுவோம். உலகம் அழிந்தாலும் உங்கள் நினைவு அழியாது. உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகின்றோம்.

அன்பு மகன்
திரு. க. மகேந்திரனும்
குடும்பத்தினரும்

பத்தமேனி
அச்சுவேலி.

(8027)

பயனடைந்து வருகின்றனர்.
(41)

## ஆவணத் தொகுப்பு

தென்மராட்சிப்பகுதியிலுள்ள இலக்கியகர்த்தாக்கள் மற்றும் படைப்பாளிகள் போன்றவர்களின் உள்ளடக்கிய ஆவணத் தொகுப்பு தயாரிப்பதற்கான முயற்சியில் அறவழி இலக்கிய பேரவை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அறவழிப் போராட்டக் குழுவினரின் ஏற்பாட்டில் அறவழிப் பயிலகத்தில் நடைபெற்ற அறவழி இலக்கியப் பேரவையின் கூட்டத்திலே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இந்த ஆவணத் தொகுப்பு தொடர்பான விவரங்கள் தென்மராட்சி பகுதியிலுள்ள அறுபது கிராம சேவகர் பிரிவுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இத் தொகுப்பு வெற்றிகரமாக நிறைவுபெற இப்பகுதியிலுள்ள கவிஞர்கள், எழுத்தாளர்கள் தங்கள் வெளியீடுகளின் இரு பிரதிகளையும் தங்களைப் பற்றிய விபரங்களையும் அறவழிப் போராட்டக் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

## சிரமதானம்

அன்னை பூபதியின் 6 ஆம் ஆண்டு நினைவை நினைவு கூர்ந்து கொண்டிருக்கும் இவ் வேளையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ் மாவட்டச் செயலகத்தின் பணியாளர்கள் உரும்பராய் தெற்கு செல்வபுரம் கிராமத்தில் பஸ்தரிப்புக்கு அருகாமையில் உள்ள பொ. தர்மலிங்கம் வீதியை சிரமதான மூலம் சீர்செய்துள்ளனர்.

கடந்த மாதம் இருபத்தாறாம் திகதி நடைபெற்ற இச் சிரமதானப் பணியினரால் இவ்வளவு காலமும் காணப்பட்டு வந்த போக்குவரத்துக் கஷ்டங்கள் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## வன்னிப்பகுதியில் வதிவிட வேளாண்மை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் முதலாவது முறையாக இந்த வருடம் வன்னி மாவட்டத்தில் வதிவிட வேளாண்மைப் போட்டி நடாத்தப்படுகிறது.

இப்பணியில் செயற்படும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடந்த இரண்டு வருடங்களாக யாழ் மாவட்டத்தில் நடாத்திவந்த வதிவிட வேளாண்மைப் போட்டியை இவ் வருடம் முதல் வன்னி மாவட்டத்திற்கும் விஸ்தரித்துள்ளது.

வதிவிடங்களைச் சுற்றிய இடங்களில் மரக்கறிகள், கிழங்குவகை, தானியங்கள் ஆகியவற்றை பயிரிடுவதுடன் பழமரங்கள், பயன்தரு மரங்கள் ஆகியவற்றை நடுகை செய்வதும் ஆடு, கோழி போன்ற கால் நடைகளை வளர்த்து வரும் எவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

## தனியார்தேயிலைஆலைகள் தெற்கில் மூடப்படும் நிலை

(கொழும்பு)

தெற்கில் தனியார் தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட அறுபது கோடி ரூபா கடன் உதவி இதுவரை வழங்கப்படவில்லை இதனால் இப்பகுதியில் உள்ள சுமார் 125 தேயிலைத் தொழிற்சாலைகளும் இழுத்து மூடப்படும் நிலை தோன்றியுள்ளது.

ஏற்கனவே தற்போது 78 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன சுமார் இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் இதனால் வேலை இழந்துள்ளனர்.

## அமைச்சர் ரணசிங்க பதவி விலகும் சாத்தியம்

(கொழும்பு)

தகவல் துறை இராஜாங்க அமைச்சரான ஏ. ஜே. ரணசிங்க விரைவில் தமது பதவியை இராஜினாமாச் செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை இராஜாங்க அமைச்சர் வெளியிட்ட சில அறிக்கைகள் தொடர்பாக விசாரணை நடத்திய சுகாதாரஅமைச்சர் திருமதிரேணுகா ஹேரத் தலைமையிலான விசாரணைக் குழு அமைச்சர் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி சிபார்சு செய்துள்ளதாக நம்பகரமாகக் கூறப்படுகிறது.

இவ் விசாரணைக் குழுவின் அறிக்கை கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இன்னமும் சமர்ப்பிக்கப்படாத போதும் கட்சியின் பொதுச்செயலாளர் சிறிசேன கூரே அமைச்சர் ரணசிங்கவை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

## தெய்வீக தொடர் சொற்பொழிவு

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு 'மகாபாரதம்' பற்றி தெய்வீக தொடர் சொற்பொழிவு தினமும் நடைபெறவுள்ளது. திரு. வை. நித்தியானந்த சர்மாவினால் நிகழ்த்தப்படும் இத் தொடர் சொற்பொழிவின் இறுதியில் இந்து இளைஞர் மன்றம் சமய அறிவுப் போட்டியொன்றையும் நடத்தவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமரர் கதிர்காமு கந்தையா

(முன்னாள் ஏழாலை கிராமசபை உபதலைவர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 16-4-94 சனிக்கிழமை காலை 10-00 மணி முதல் 12-00 மணி வரை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

தேவி தோட்டம்,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
தகவல்- க: மயூரன்

(8044)

## வாழ்த்துகிறோம்

பட்டப்படிப்புகள் கல்லூரியின் மெய்யியல் விரிவுரையாளர்



### திரு. வே. யுகபாலசிங்கம்

சிரித்த முகத்தோடு சிந்தையினைக்
கிளறிவிடும்
சிந்தனையின் வித்தகரே, சிறப்பான
விரிவுரையால்
தத்துவத்தைத்தந்தெம்மை தெளிவாக்கி
வைத்தவரே
முதுமாணிப்பட்டத்தை (.M A)முயன்றுநீர்
பெற்றதுபோல்
பல்கலைகள் தேர்ந்திடவே வாழ்த்துகின்
றோம் மனம்குளிர,

பழைய மாணவர்கள்
பட்டப்படிப்புகள் கல்லூரி

(8048)

## பதவி வெற்றிடம்

மிருசுவில் படித்த மகளிர் திட்ட ப. நோ. கூ. சங்கம்

**பதவி: பெண் முகாமையாளர்.**

**வேதனம்:** 700 -- 950 / 15X10 - 20X5

**தகைமைகள்:**

1. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) தராதரப்பத்திரம்.
2. க. பொ. த. (சாதாரணம்) இரு அமர்வுகளில் கணிதம், வர்த்தகம், தமிழ் உட்பட ஆறுபாடங்களில் சித்தி;

**வயது:** 25 - 40 வரை

சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும்.

**பிணை:** காசுப்பிணை 3000/- ஆதனப்பிணை 15000/-

**விண்ணப்ப முடிவு திகதி:** 1994-05 15

விண்ணப்பம் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் மேற்படி சங்கக் காரியாலயத்தில் சேர்க்கப்படல் வேண்டும்.

தலைவர் ப. ம. திட்டம்
மிருசுவில்.

(8020)



இன்றிரவு

நல்லூர் பண்டாரக்குளம் ஸ்ரீ விநாயகர் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு ஆலயதொண்டர்கள் நடாத்தும்

# மாபெரும் பட்டி மன்டபம்

"இல்லற வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு பெரிதும் துணைநிற்பது"

| தலைவியா! | தலைவனா! |
|---|---|
| தலைவியே | தலைவனே |
| திரு கலாகரன் | திரு செல்லவடிவேல் |
| திரு பிரபாகரன் | திரு சி. சிறிதரன் |
| காரை S. கங்கா | திரு S. மகேந்திரன் |

தலைமை தாங்குபவர்

**திரு. குமாரவேல் அவர்கள்**

நிகழ்ச்சி ஆலய முன்றலில் இரவு 7மணி அளவில் ஆரம்பமாகும்

வாழ்த்துவோர்,

"ஸப்தஸ்வரா"

இசைக்குழு

யாழ்ப்பாணம். (8041)



அறிவுத் தேடலின்

## அவசியம் உணர்ந்த சேவை

- பரீட்சை வினா விடைகள்
- பாட நூல்கள்
- அறிவியற் சஞ்சிகைகள்
- சிறுவர் இலக்கியங்கள்
- ஆய்வுக்குரிய நூல்கள்
- பொழுதுபோக்கு சஞ்சிகைகள்.

**வாசிக்க வாருங்கள், வந்து பயனடையுங்கள்.**

மாணவர் அறிவியற் கழகம்
விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

(இ-8081)



## வேலை வாய்ப்பு

தகுதியுடையவர்களிடம் இருந்து பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**1- TRAINEES ACCOUNTS CLERK**

அ: வயது: ஆகக்கூடியது; 24 ஆண் / பெண் இருபாலாரும்

ஆ தகைமை: க; பொ: த (உ/த) சித்தி, அத்துடன் க. பொ. த (சா/த) கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி

இ. மேலதிக தகைமை: கணக்கியல் துறைசார்ந்த உயர் கல்வி (AAT, NCAT, IAB) பயில்பவர்களின் தகைமை.

**2- SALE REPRESENTATIVE**
(விற்பனைப் பிரதிநிதி)

அ: வயது; ஆகக்கூடியது 24 ஆண்

ஆ: கல்வித் தகைமை: க; பொ; த; (உ/த) சித்தி, க. பொ- த- (சா/த) கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி

இ. சுறுசுறுப்பாக செயற்படக்கூடியவராக இருத்தல் வேண்டும்- வேதனம் ஊக்கத்துடன் தொடர்புடையதாக இருக்கும்.

22 - 04 - 1994 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

இயக்குநர்

TASTE LINE INDUSTRIES (PVT) LTD,
No 14, Seenier Lane,
Jaffna.

(இ-9157)


# பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் மக்கள் ஐக்கிய முன்னணி இணையும்?

(கொழும்பு)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் மக்கள் ஐக்கிய முன்னணி ஒன்றிணைவதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் மிக விரைவில் இவை ஒன்றிணையும் எனவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்;

இது தொடர்பாக உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருவதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் தீ.மு ஜயரட்ன தெரிவித்துள்ளார். அனேகமாக எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறும் மேதின ஊர்வலத்திலும் பொதுக் கூட்டங்களிலும் இக் கட்சி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயல்படும் என அவர் மேலும் தெரிவித்தார்;

இது தொடர்பாக மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்தன கருத்து தெரிவிக்கையில் தற்போது சமுகமான நிலையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதான கட்சியாக இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இது தொடர்பாக மௌனம் சாதித்து வருவதாகவும் எனவே பேச்சுவார்த்தைகள் முடியும் வரை எதுவும் கூறமுடியாது எனவும் தெரிவித்துள்ளார்;

இவ்வார இறுதியில் இறுதிப் பேச்சுக்கள் நடைபெறும் என்றும் அதற்கிடையில் சுதந்திர கட்சியுடன் விரிவான பேச்சுவார்த்தை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் ஆண்டாக இருப்பதினால் எதிர்க்கட்சிகளின் முழுமையான ஒன்றிணைப்பைப்பெற்று ஆளும் ஐக்கியதேசியக் கட்சியை தோல்வியடையச் செய்யவேண்டும் என்பதே பிரதான நோக்கமாக உள்ளமையினாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


## புங்குடுதீவு-நயினாதீவு பல நோ.கூ.சங்கம்

## லொறி தேவை

லொறி விற்பனை செய்ய விரும்புபவர்கள் கவனத்திற்கு!

நல்ல நிலையில் பாவனையிலுள்ள அசோக் லேலண்ட், இசுசு ஆகிய லொறிகள் விற்பனை செய்ய விரும்புபவர்கள் உடனடியாக தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றேன்;

- பதில் பொது முகாமையாளர்

201/1, 2-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (இ-9156)



## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

மனிதங்கள் சமூக சேவைகள் அமைப்பு
காரியாலயம் இராமராட்சி மன்றம்
புத்தூர்.

| | | |
|---|---|---|
| 1-ம் பரிசு | - | 2641 |
| 2-ம் ,, | - | 3548 |
| 3-ம் ,, | - | 1089 |

ஆறுதல் பரிசில்கள்

| | |
|---|---|
| 01 - 0846 | 02 - 2275 |
| 03 - 3006 | 04 - 2592 |
| 05 - 3396 | 06 - 5537 |

எதிர்வரும் 20-04-94 புதன்கிழமை மாலை 3மணிக்கும் 6 மணிக்கும் இடையில் காரியாலயத்தில் பரிசில்கள் வழங்கி வைக்கப்படும்

நன்றி

(8089) - மனிதங்கள்


## இன்றைய நிகழ்வுகள்

வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் கொடியேற்றம் இன்று சனி காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது; 24 ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும்;

ஃ ஃ

மேலைப் புலோலி சதாவதானி நா. கதிரவேற்பிள்ளையின் 87 ஆவது ஆண்டு நினைவு விழா இன்று சனி மாலை 6 மணிக்கு சதாவதானி அரங்கில் நடைபெறும்,

ஃ ஃ

யாழ் கல்வித்திணைக்களம், யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் ஆகியவை இணைந்து யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்காக நடத்தி வரும் மெய்வல்லுநர் சட்டவிதிகள் பற்றிய கருத்தரங்குத் தொடரின் இறுதி நாள் வைபவமும், சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியும் இன்று சனிக்கிழமை காலை 8 30 மணி முதல் யாழ் இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

ஃ ஃ

(குருநகர்)

சண்டிலிப்பாய், சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 - மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

22 - ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு புதிய சித்திர சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறும்.

25 - ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ரதோற்சவமும், மாலை 4 மணிக்கு தீர்த்தோற்சவமும், 27 - ஆம் திகதி புதன்கிழமை பூங்காவனமும் நடைபெறும்.

(21)

உதிரிப்பாகங்கள் கொள்ளை

(வடமராட்சி)

பருத்தித்துறை சிவன்கோவில் சந்தியில் உள்ள கடை ஒன்றில் இருந்து பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கடந்த செவ்வாய் இரவு களவாடப்பட்டுள்ளன இக்கடையில் இருந்து துவி


உதித்த புத்தாண்டில்
முத்தான ஓர் உதயம்

முத்தான ஓர் உதயம்

# அழகியல் உதிரிப்பாக மாடம்

இன்று (16.04 1994) மங்களகரமாகத் திறந்து
வைக்கப்படவுள்ளது

இதோ!

உங்கள் வாகனங்களுக்கு செழிப்பான எதிர்காலம்

★ மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் ★

★ எரிபொருள் வகைகள் ★ சகல ?ண்ணெய் வகைகள் ★

மற்றும்

○ பலவகை புதிய சைக்கிள்கள் [ஆண்-பெண் இருபாலாருக்கும் ஏற்றவை] ○

○ சைக்கிள்களுக்கான உதிரிப்பாகங்கள் ○

0 சகல வகை காகிதாதிப் பொருட்கள் 0

இவையாவும்

தரமானவை! நீடித்துழைப்பவை!

இவற்றினை பெற்று நீங்கள் பூரிப்படைய

## இன்றே விரையுங்கள்!

## அழகியல் உதிரிப்பாக மாடம்

இல. 71, லெப். கேணல் சந்தோசம் தெரு
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

(இ-9158)



நன்றி

(8039) - மனிதநேயன்



## உடன் தேவை

1. பொறிமுறை படவரையுனர்கள் (ஆண்கள்)
2. தட்டெழுத்தாளர்கள் (ஆண்கள்)

பொறிமுறைப் படவரையுனர்களின் அனுபவம் வாய்ந்த படவரையுனருடன், பயிலுனர் படவரையுனரும் தேவை;

சொந்த விபரங்களுடன் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்;

விளம்பர இல. 324
மேப்பா சமுதாயம்,
31 மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்;

(8040)


...இரவு களவாடப்பட்டுள்ளன. இக்கடையில் இருந்து துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்களே இனம் தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளன. பருத்தித்துறை காவல்துறையினர் மேல்விசாரணைகளை மேற்கொண்டனர் (ஜோ)

### இயந்திரம் திருத்தும் பயிற்சி

அறவழிப் போராட்டக்குழுவினரின் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவித் திட்டத்தின் கீழ் நீர்இறைக்கும் இயந்திரம் திருத்தும் பயிற்சி 09-04-94இல் அறவழிப்பயிலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பயிற்சியில் முப்பதுக்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது


உ
சிவமயம்

## புதுக்கடை திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் பவஹூ சித்திரை மீ 8ந் திகதி (16-4-1994) சனிக்கிழமை பகல் 7 மணி 55 நிமிஷம் தொடக்கம் 9-00க்குள்ளாக வரும் சுபலக்கின நல்வேளையில்,

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவுள்ள

## ஞானம் (பல்பொருள் விற்பனைக் கூடம்)
GNANAM TRADE CENTRE

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடாத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்;

இங்ஙனம்,
அஜந்தாஸ் புடவை மாளிகை

(சி-9118)

Nallur Branch Library

சிந்தனைக்கு

போருக்கு ஆயத்தமாய் இருப்பதே
சமாதானத்தைப் பாதுகாக்க பயனான வழி.
- ஜோர்ஜ் வாஷிங்டன்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## போராடினால் மட்டுமே தமிழருக்கு வாழ்வு

தவிர்க்க முடியாமல் யாழ். குடாநாட்டில் பெரும் போர் ஒன்று நடைபெறுவதற்கான சூழ்நிலை உருவாகி வருகின்றது. சிறிலங்கா அரசாங்கம் அதற்கான தயாரிப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டும் வருகின்றது.

சிறிலங்கா அரசின் இந் நடவடிக்கையானது சமாதானத்திற்கான கதவை அது இறுக்கமாகவே மூடிவிட்டதை வெளிக்காட்டுவதாகவே உள்ளது. அதாவது இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு என்ற பேச்சை எடுக்கவே அரசாங்கம் தயாராக இல்லை என்பதை அதன் தற்போதைய அறிவிப்புக்களும் நடவடிக்கைகளும் தெளிவுபடுத்துகின்றன.

இந்நிலையில் பல உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புக்களும் மேற்கொண்ட சமாதான மற்றும் நல்லிணக்க முயற்சிகளும் பயனற்று முடிந்துள்ளன. இதேசமயம் இனிமேலும் எடுக்கப்படும் எந்த முயற்சியும் வெற்றி அளிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் இல்லை. ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவைச் சந்திக்க தென்னிலங்கை துறைசார் வல்லுநர்கள் எடுத்த முயற்சிக்கு கிடைத்த பதிலே இதற்குப் போதுமானதாகும். துறைசார் வல்லுநர்களிடம் பேசிய ஜனாதிபதியின் செயலாளர், அரசாங்கத்தைப் பொறுத்துதேர்தல்தான் முக்கியமானது. தேர்தல் பிரசாரம் ஒன்றிற்கான யுத்தத்தைப் படையினர் திட்டமிட்டுவருவதால் இவ்வேளை சமாதானம் என்ற பேச்சுக்கள் சாத்தியப்படாது. எனவே இது தொடர்பாக எந்தப் பேச்சுவார்த்தைகளிலோ அன்றி முயற்சிகளிலோ ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளவே ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். அத்தோடு டி. பி. விஜேதுங்காவைச் சந்திக்கும் துறைசார் வல்லுநர் குழுவின் முயற்சியும் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் சமாதானத் தீர்வொன்றைக் காண விடுதலைப் புலிகள் எடுத்த முயற்சிகளும், அவற்றுக்கு வழங்கிய ஒத்துழைப்பும் பயனற்ற தொன்றாகவே போயுள்ளது. அரசாங்கம் தமிழரின் பிரச்சினைக்கு நியாயபூர்வமானதொரு அரசியற்தீர்வு காண்பதில் எதுவித முயற்சியும் மேற்கொள்ளத் தயாராக இல்லை என்பதே

# காமினி மீள ஐ.தே.கவில் இணைந்ததை நான் ஒருபோதும் விரும்பவில்லை
## கூரே

(கொழும்பு)

தென் மாகாண சபை தேர்தல் தோல்வியை அடுத்து ஐ. தே. கவினுள் பிளவுகள் ஏற்பட்டுள்ளதாக வெளிவந்த செய்திகளைகட்சியின்பொதுச் செயலாளர் சிறிசேனா கூரே மறுத்துள்ளார். இது குறித்து சண்டேரைம்ஸ் பத்திரிகைக்கு அவர் பேட்டியளித்தார். பேட்டியின் போது காமினி திஸ்ஸ நாயக்கா மீள ஐ. தே. கவில் சேர்க்கப்பட்டது குறித்த கேள்விகளுக்கு அவர் நேரடியாக பதிலளிக்கவில்லை.

கேள்வி: தெற்கில் ஜே. வி. பி இளைஞர்களின் ஆதரவை ஐ.தே.க பெறத் தவறியுள்ளதா?

பதில்: இது தெற்கில் மட்டும் நடக்கவில்லை. ஜனாதிபதி பிரேமதாசாவின் பின்னர் எவரும் அவ்இளைஞர்களை ஜனநாயக நீரோட்டத்தில் இணைக்க முயற்சிக்கவில்லை என்றகருத்து நிலவுகிறது.

கேள்வி: கட்சியின் தேர்தல் தோல்விக்கு சிலர் உங்களையும் வேறுசிலர் ஜனாதிபதி அல்லது பிரதமரையும் குற்றஞ்சாட்டுகின்றனரே?

பதில்: எவரையும் குற்றஞ்சாட்டமுடியாது.

கேள்வி; நீங்கள் அநுராவை ஐ.தே.கவிற்குள் அழைத்திர்கள் அவரிடம் என்ன எதிர்பார்த்தீர்கள்?

பதில்; ஜனநாயக சிந்தனைகள் உள்ள நபர் அவர்; அத்துடன் அவர் அரசியலை விட்டுவிலகுவதை தடுத்தேன்.

கேள்வி: அநுராவினால் சுதந்திரக்கட்சி வாக்குகள் ஐ. தே. கவிற்கு கிடைக்கும் என எண்ணினீர்களா?

பதில்; இல்லை, வாக்குகள் அப்படி உடையாது. நான் ஐ. தே. கவிலிருந்து பிரிந்தால் கூட எனது ஆதரவாளர்கள் அனைவரும் என்னைப்பின்தொடர்வர் என எதிர்பார்க்க முடியாது. நாம் யதார்த்தத்தைபுரிந்துகொள்ளவேண்டும்.

கேள்வி; காமினி திஸ்ஸ நாயக்கா ஐ.தே.கவில் இணைந்தது நன்மையா?

பதில்: அதில் தீமை ஏதுமில்லை.

கேள்வி: காமினி ஐ. தே. கவில் இணைந்ததால் அவரது தனிப்பட்ட எதிரிகள் மக்கள் கூட்டணியில்இணைந்தார்கள் என நீங்கள்நம்புகின்றீர்களா?

பதில்; அது தெளிவாக தெரிகிறதே.

கேள்வி; தன்னை முன்னமே ஐ. தே. க மீளசேர்த்துக்கொண்டிருந்தால் தென் மாகாணத்தில் ஐ.தே.க வெற்றிபெற்றிருக்கும் என காமினி கூறியுள்ளாரே?

பதில்; (சிரிப்புடன்) அது அவரின் யோசனை.

கேள்வி; அதை நீங்கள் ஏற்கிறீர்களா?

பதில்: இல்லை.

கேள்வி; ஏன்?

பதில்: இவ்விடயத்தில் மக்களிடம் பலவிதமான நோக்குகள் உண்டு. இது அவர்களது உரிமை.

கேள்வி: காமினி மீள ஐ. தே. கவில் இணைவதை நீங்கள் தடுத்தது உண்மையா?

பதில்; இல்லை நான் என் கடமையை செய்கிறேன். கட்சி செயலாளர் என்ற வகையில் எனது தனிப்பட்ட உணர்வுகளை தவிர்த்தேன். நான் எப்போதும் அரசுக்கும் எனது கட்சிக்கும் விசுவாசமாக இருப்பேன். நான் எப்போது நினைக்கிறேனோ அப்போது எனது பதவியை ராஜினாமா செய்வேன்.

கேள்வி; காமினி மீள கட்சியில் சேர்க்கப்பட்டது குறித்து தனிப்பட்ட ரீதியில் உங்களுக்கு திருப்தியில்லையா?

பதில்: நான் நடுநிலை பாதையில் உள்ளேன். கட்சிக்கு பல உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற கருத்தை கொண்டிருந்தேன்

கேள்வி: காமினி மீள ஐ தே. கவில் இணைந்ததை நீங்கள் எதிர்க்கிறீர்களா?

பதில்; ஆம். அப்படியிருக்கலாம்.

கேள்வி: காமினிக்கு கட்சி உறுப்பினர் அட்டை வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டதா?

பதில்; அதற்கு காரணம் என்ன என்பது தெரியுமா? கட்சியை விட்டு சென்றஒருவரை மீளகட்சியில் சேர்ப்பதற்கு கட்சிசெயற்குழுவின் அனுமதி தேவை.

கேள்வி: கட்சி செயற்குழு காமினியை மீள இணைப்பதற்கு அனுமதிக்கவில்லையா?

பதில்: ஜனாதிபதி தான் விரும்பிய எவருக்கும் உறுப்பினர் பதவி வழங்கும் உரிமையை செயற்குழு வழங்கியிருந்தது. ஜனாதிபதி இதுகுறித்து செயற்குழுவுடன் கலந்து பேசத்தேவையில்லை. இவ்விடயத்தில் ஜனாதிபதி தவறு ஏதும் விடவில்லை.

கேள்வி: காலிக்கு காமினி சென்றபோது அவரை சந்திப்பதை தவிர்க்க நீங்கள் சிங்கப்பூர் சென்றது உண்மையா?

பதில்: இல்லை. நான் அதற்குமுன்பே சென்றுவிட்டேன். எப்படியாயினும் காமினி என்னைஅழைத்திருந்தார். ஆனால் நான் அங்கிருப்பது முக்கியமல்லஎன்பதை நான் உணர்ந்தேன்.

கேள்வி: அமைச்சர் தொண்டமானுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் மோதல் நிலவுதாக கூறப்படுகிறதே?

பதில்: தனிப்பட்ட மோதல் இல்லை. கொள்கை மோதல்களே.

கேள்வி; எதிர் காலத்தில் தொண்டமான் தேர்தலில் ஐ. தே. கவிற்கு ஆதரவு தருவாரா?

பதில்; அது அவரைப் பொறுத்தது. எனினும் அவர் இன்னமும் எமது கட்சிக்கு ஆதரவாகவே உள்ளார்.

கேள்வி; ஜனாதிபதி பிரேமதாசாவையும் ஜனாதிபதி விஜேதுங்காவையும்எவ்வாறுஒப்பிடுகிறீர்கள்?

பதில்: எல்லா தலைவர்களும் தமக்கு ஒரு பாணியை கொண்டுள்ளனர். பிரேமதாசா நீண்ட காலமாக பணியாற்றிய அனுபவங்கள் உடையவர் அவரது பாணி வேறுபட்டது; அவர் சுறுசுறுப்பானவர் திறமையானவர், தன் பணிக்காக நேரத்தை செலவிடுபவர்.

கேள்வி: அப்படியாயின் ஜனாதிபதி விஜேதுங்க...?

பதில். இவரது பாணி வேறுபட்டது. இவர் பொதுவாகவே தனது பணியை ஆற்றுபவர். இவரின் திட்டங்கள் நடைமுறையாகும் போது மக்கள் அவரை வேறுவிதமாக நோக்குபவர். எல்லோரிடமும் ஒரே மாதிரியான திட்டங்கள் இராது.

கேள்வி: இவர்களில் யார் திறமைசாலி?

பதில்: எல்லோருக்கும் அது தெரியும் என்னிடம்கேட்கத்தேவையில்லை.

கேள்வி: எப்போது அரசியலை கைவிடுவீர்கள்?

பதில்: எனது கட்சி மீண்டும் வெற்றி பெற்ற பின்பு.

கேள்வி: எதிர்வரும் தேர்தலில் ஐ. தே. க வெற்றி உறுதியானால் நீங்கள் அரசியலை விட்டுவிடுவீர்களா?

பதில்: அப்படிச்செய்ய எண்ணியுள்ளேன்

# வை.கோ. தலைமையில் தமிழகத்தில் மாபெரும் எழுச்சிப் பேரணி ஏற்பாடு

(சென்னை)

இன்று தமிழகத்தில் மாபெரும் எழுச்சி நாள் பேரணி நடைபெறவுள்ளதாக வை. கோபாலசாமி அறிவித்துள்ளார். இப்பேரணி குறித்து அவர் கருத்துதெரிவிக்கையில், ''புதிய வரலாறு படைத்திட புயலாகப் புறப்படுவீர், தமிழ் நாட்டின் அரசியல் தலைவிதியை வருங்காலத்தில் தீர்மானிக்கும் திருப்பு முனையாய் எழுச்சி நாள் பேரணி திகழ்ந்திடவும் புதிய வரலாறு படைத்திடவும்புறப்படுவீர் இதற்கென நமது பாசறைகள் தமிழகமெங்கும் ஆயத்தமாகி வருகின்றன.

இந்த எழுச்சிப்பேரணி எனவிளங்கவைக்க வேண்டும். இந்தி ஏகாதிபத்தியத் திற்கு இறுதி எச்சரிக்கை செய்ய ஏப்ரல் 16 எழுச்சி நாள், அன்னை தமிழை ஆட்சி மொழியாக்க ஆதிக்க இந்திக்கு முடிவுகட்ட ஏப்ரல் 16 எழுச்சி நாள் தொலைக்காட்சி நிலையமா இந்தி பரப்பும் கூடமா? கொடுமைக்கு முடிவு கட்ட ஏப்ரல் 16 எழுச்சி நாள், அகதிகளாக வந்த தமிழன் பிள்ளைகள் கல்வி கற்க தடையா தமிழினம் காக்க ஏப்ரல் 16 எழுச்சி நாள், சிங்கள கடற்படை சுட்டுக் கொல்ல தமிழக மீன

கொடுமைக்கு முடிவு கட்ட ஏப்ரல் 16 எழுச்சி நாள், எங்கள் நாட்டினில் எங்கள் தமிழை ஆட்சி மொழியாக்கு என முரசு கொட்ட ஏப்ரல் 16, மாநில சுயாட்சி முழக்கம் எட்டுத் திசையும் எதிரொலிக்க ஏப்ரல் 16, மத்திய அரசே காட்டாட்சிக்கு விடைகொடு கூட்டாட்சிக்கு வழிவிடு உரிமைப்போர் தொடுக்க ஏப்ரல் 16 எழுச்சி நாள், காவிரி நீருக்கு நீதி வழங்க மறுக்கும் மைய அரசே தேசியம், உனக்கு ஒரு கேடா?'' எனத் தெரிவித்

## மதிவாணன் நடத்தை பற்றி ரகசிய பொலிஸ் விசாரணை

(கொழும்பு)

கொழும்பு குண்டு வெடிப்புகளின் போது கல்கிசை கடற்கரையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட மகேந்திரன் மதிவாணன் பணியாற்றிய 'ஜோர்ஜ் கிருணாநீஸ் ட்ரவல்ஸ் இன்டர் நஷனல்' லிமிட்டெட்டிலும் பொலிசார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்நிறுவன ஊழியர்களிடமிருந்து வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டதாக குற்றப் புலனாய்வு பொலிஸ் பிரிவு அதிகாரி தெரிவித்தார். மதிவாணன் பணச்சீட்டு பதிவு செய்யும் இந்நிறுவனத்தில் பணியாற்றியதாகவும் தனியார் கம்பியூட்டர் நிறுவனம் ஒன்றில் பகுதிநேரக் கடமை செய்துவந்தார் எனவும் அவர் தெரிவித்தார்.

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகரில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து தொல்புரம், மூளாய் பகுதிகளின் மக்கள் குடியிருப்புக்கள் மீது கோர எறிகணை வீச்சினை 13ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியளவில் மேற்கொண்டனர்.

பூர்வமானதொரு அரசியற்தீர்வு காண்பதில் எதுவித முயற்சியும் மேற்கொள்ளத் தயாராக இல்லை என்பதே இன்றைய அரசியல் யதார்த்தமாகும்.

மாறாக இவ்வாண்டு இறுதிக்குள் பெரும் யுத்தம் ஒன்றை நடத்தி விடுவதிலேயே அரசாங்கம் அக்கறை காட்டுவதாகவுள்ளது. இவ்வாண்டு இறுதிக்குள் நடைபெறவுள்ள பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களின் முன், பிரசாரத்திற்கு ஏற்ற வகையிலும் ஒரு பெரும் வெற்றியை ஈட்டவே சிறிலங்கா அரசாங்கம் முனைகின்றது. இதற்கென அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பெரிய அளவினதாகும்.

சிறிலங்கா இராணுவம் பெரும் பொருட் செலவில் நவீனமயப்படுத்தப்பட்டு வருகின்றது. நவீன ஆயுதத் தளபாடங்கள் உலக நாடுகள் பலவற்றில் இருந்து கொள்வனவு செய்யும் முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென உயர் அதிகாரிகள் குழு பல நாடுகளுக்கும் விஜயங்கள் மேற்கொண்டுள்ள அதேவேளை ஆயுதக் கொள்வனவிற்கென பெரும் நிதியையும் ஒதுக்கிக் கொடுத்துள்ளது.

அத்தோடு குருப்புக்களின் தொகையை அதிகரிப்பதிலும் குருப்புக்களுக்கும் அதிகாரிகளுக்கும் விசேட பயிற்சிகள் வழங்குவதிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இப்பயிற்சிகளானது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் இராணுவக் கட்டமைப்பும் மாற்றப்பட்டு உள்ளது.

அதாவது டி.பி.விஜேதுங்கா இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண்பதற்கு தன்னால் ஆன முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார். இதன் மூலம் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்படும் என்பதோடு, தென்னிலங்கையில் தமது கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியிலும் உள்ள தனக்கு எதிரானவர்களைக் கட்டுப்படுத்தவும் முடியும் எனவும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐ.தே.க. வேட்பாளராகத் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் எனவும் நம்புவதாகத் தெரிகின்றது.

இவ்வாறாகவுள்ள அரசியற்சூழலில் தமிழ் மக்கள் இனப்பிரச்சினைக்கு சமாதான முயற்சிகள் மூலம் தீர்வு எதுவும் கிட்டும் என்ற சிந்தனையில் இருந்து முற்றாக விடுபட வேண்டும். இல்லாது போனால் சிங்களப் பேரினவாதம் தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்வதோடு தமிழர் தேசியத்தையும் சிதைத்துவிடும். இந்நிலையில் தமிழர்கள் போராடினால் மட்டுமே வாழ்வு என்பதைப் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும்.

---

முகமெங்கும் ஆயத்தமாகி வருகின்றன.

தமிழக மக்களுக்கு ஏன்

...சுட்டுக்கொல்ல தமிழக மீனவர்கள் குருவியா கொக்கா

...கேடா?'' எனத் தெரிவித்தார்.

# விடுதலைப்புலிகள் மீதான தடை ஜெயலலிதா-சவான் முறுகல் நிலை

(சென்னை)

விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் நீடிப்பது குறித்த விபர அறிக்கை எதுவும் தமிழக அரசிடமிருந்து தமக்கு கிடைக்கவில்லை என மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் கூறியுள்ளார்.

மத்திய அமைச்சர் சவானின் இக் கூற்றை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மறுத்துள்ளார். விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் இரு ஆண்டுகள் நீடிக்கக் கேட்டு ஜனவரி 28 இல் மாநில அரசு மத்திய அரசுக்கு கடிதம் எழுதியதாக ஜெயலலிதா கூறினார்.

இக்கடிதத்திற்கு பின் மத்திய உள்துறை அமைச்சகம் பெப்ரவரி 24 உம், மார்ச் 24, 31 ஆம் திகதிகளிலும் கூடுதல் விபரங்களை கேட்டிருந்தது. அவற்றிற்கு தமிழக அரசு உடன் பதில் எழுதியது. மத்திய உள்துறை அமைச்சகத்தின் அழைப்பின் பேரில் தமிழக சிறப்பு புலனாய்வு பொலிஸ் அதிகாரி பி.சி. பந்த் புதுடில்லி சென்று மத்திய அரசு கோரிய விபரங்களை கையளித்தார். விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்க தேவைப்படும் எல்லா விபரங்களையும் அளிக்க மாநில அரசு எப்போதும் தயாராக உள்ளது எனவும் முதலமைச்சர் ஜெயலலிதா மேலும் தெரிவித்தார்.

---

# உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகள் நடத்த ஏற்பாடு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்படும் உற்பத்தி எழுச்சி வாரம் எதிர்வரும் ஏப்ரல் 24 ம் திகதி முதல் 30 ம் திகதி வரை மிக எழுச்சியுடன் நடைபெற இருக்கின்றது.

பொருண்மிய விடுதலை பெறப் போராடும் எமது உழைக்கும் மக்கள் எமது தேசத்தின் உயிர்நாடிகளாவர். இவர்களது உழைப்பின் பயனாகவே எமது தேசத்தின் உற்பத்திகள் வெளிவருகின்றன. உழைக்கும் மக்களிடையே உற்பத்தியினை ஊக்குவிக்கும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் வருடாந்தம் ''உற்பத்தி எழுச்சிவாரம்'' போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

இவ் வாரத்தில் நீச்சல், பாய்மரம் ஓட்டுதல், தடுப்பு வலித்தல், வலை பின்னுதல், துலா மிதித்தல், மாட்டுவண்டிச் சவாரி, உழுதல், நிலம் கொத்துதல், புதிய உணவு வகை தயாரித்தல், பனைமரம் ஏறுதல், கைப்பணி, சிறு கைத்தொழில், பதனீர் உற்பத்தி, வீட்டுத் தோட்டம் அமைத்தல், வாய்க்கால் திருத்துதல், வீதி திருத்துதல், பொது அறிவுப் போட்டிகள், ஆகிய போட்டிகள், நடைபெற இருக்கின்றன.

அத்துடன் நிலமற்ற வசதியற்ற ஆனால் ஊக்கமுள்ள குடும்பங்களுக்கு கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலம் தரிசாக விடப்பட்டிருக்கும் விவசாய நிலங்களைத் தற்காலிக அடிப்படையில் பயன்படுத்துவதற்கு வழங்குதல், சிரமதானம், குளம் புனரமைப்பு, வாய்க்கால் திருத்துதல் போன்ற செயற்பாடுகளும் நடைபெறவுள்ளன.

---

**வீட்டில் தோட்டம் செய்தால் நாட்டில் பசி தீரும்**

---

# தூர இடங்களில் கல்விக் கருத்தரங்குகள்

(நல்லூர்)

மருதங்கேணிப் பிரிவுக்கென தனியான கோட்டக் கல்வி அலுவலகம் திறக்கப்பட்ட போதும், ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை அப்பிரிவில் ஒழுங்கு செய்யாது பருத்தித்துறை, கரவெட்டிக் கோட்டங்களில் ஒழுங்கு செய்வது அப்பகுதியிலுள்ள ஆசிரியர்களை மேலும் சிரமத்துக்குள்ளாக்குகின்றது எனவும், எதிர்காலத்தில் அவ்வாறு செய்யாது மருதங்கேணிக் கோட்டத்திலேயே கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து தரும்படியும், அப்பகுதி ஆசிரியர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வாரம் மருதங்கேணிப் பகுதியிலுள்ள ஆசிரியர்களை நேரடியாகச் சந்திக்கும் பொருட்டு சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் அப் பகுதிப் பாடசாலைகளுக்குச் சென்ற போதே ஆசிரியர்கள் மேற்படி கோரிக்கையை விடுத்தனர். இதற்கு பதிலளித்த பொதுச் செயலாளர் இவ் விடயத்தை யாழ் வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் நேரடிக் கவனத்திற்குக் கொண்டு வந்து மருதங்கேணிப் பகுதியிலேயே கருத்தரங்குகளை நடாத்த ஆவன செய்வதாக உறுதியளித்துள்ளார்.

அங்குள்ள போக்குவரத்துச் சேவை முற்றாகச் சீர்குலைந்துள்ளமையை ஆசிரியர்கள் சுட்டிக்காட்டிய பொழுது, அப் பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்டோருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

---

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994 04. 16 - சனி இரவு

08. 01 மணி - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''அணையாத தீபம்'' நாடகம்

08. 10 மணி - அறிவியற் கலசம்

08.25 மணி - நேயர் கடிதங்கள்

8. 30 மணி - செய்திகள்

08. 40 மணி - சித்திரம் - ஒளி எங்கும் பரப்பிடவே எழுந்திட்ட நெருப்பு நாயகர்கள்

1994. 04. 17 - ஞாயிறு காலை

07. 02 மணி - மாவீரர் வணக்கம்

07. 15 மணி - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''தியாகத் தீயில் அன்னைபூபதி''

07. 25 மணி - களத்தில் கலந்துரை

07. 45 மணி - செய்திகள்

07. 50 மணி - பத்திரிகைச் செய்திகள்

07. 55 மணி - தாயகப் பாடல்

Nallur Branch Library

# இலங்கை வங்கி கிளைக்கு 4.5 மில்.ரூபா வந்துள்ளது

(வடமராட்சி)

யாழ். இலங்கை வங்கிக் கிளைகளுக்கு 'மாகோ' கப்பல் மூலம் கொழும்பில் இருந்து பணம் வந்துள்ளது. கொழும்பு வங்கி உயர் அதிகாரிகள் இப்பணத்தை எடுத்து வந்து கப்பலில் வைத்து யாழ். இலங்கை வங்கி அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இக்கப்பலில் எடுத்துவரப்பட்ட 4.5 மில்லியன் பணத்தை யாழ். வங்கி அதிகாரிகள் கப்பலில் இருந்து நேற்று எடுத்து வந்துள்ளனர். முன்னரெல்லாம் யுத்தா வீடுக்கு முன்னரே வங்கிகளுக்குபணம் அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

இலங்கை வங்கிகளுக்கு பணம் வந்து சேர்ந்ததையடுத்து வங்கியில் உருவாகிய பணப்புழக்கத் தட்டுப்பாடு சீரடையுமென நம்பப்படுகிறது. கடந்த காலங்களோடு ஒப்பிடும் போது இம்முறை 1/8 பங்கு பணமே வந்துள்ளது. (யோ)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 15-04-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1654

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

26-6983, 41-9625, 24-9758, 27-9833, 27-3946, 28-2156, 40-0578, 28-4147, 43-4045, 42-9325, 27-9030, 27-7740, 26-0767, 24-7360, 24-8391, 24-2680, 42-1293, 26-1791.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

24-5877, 41-8096, 27-5187, 42-3993, 26 2827, 24-0207, 24-4303, 24-4390; 26-6527, 26-9186.


சாவகச்சேரி நகரசபை முன்னாள் ஆணையாளர் உயர் திரு.த.நவரட்ணராசா அவர்களின்

## சேவை நலம் பாராட்டு விழா அழைப்பு

இடம்:- சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி பிரதான மண்டபம்

காலம்;- 1994 - 04 - 17 ஞாயிறு காலை 9.00மணி

தலைவர்:- திரு. இ. ஜெயக்குமார் (சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கம்) மேற்படி விழாவில் அனைத்து அன்பர்களையும் பங்கு கொண்டு விழாவினைச் சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

சாவகச்சேரி

கைத்தொழில் வர்த்தகர் சங்கம்

(சி9168)



## பராமரிப்புச் சேவை

"நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் மற்றுமொரு சேவை நோயாளர், மற்றும் தனிமையில் வாடும் முதியோர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தை பிரசவித்த தாய்மார்கள், மழலைகள் ஆகியோரைப் பராமரிக்கும் சேவைத் திட்டமொன்றை நடைமுறைப் படுத்த நோயாளர் நலன்புரிச் சங்கம் முன்வந்துள்ளது

இச்சேவையைப் பெற்றுக் கொள்ள விழைவோர் மேலதிக விபரங்களுக்கும், சேவையைப் பெற்றுக் கொள்வதற்கும் நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளவும்"

"தொண்டுள்ளம் கொண்டோம்யாம்"


# தமது நாட்டு ஹெலிகளை சுட்டு வீழ்த்திய அமெரிக்கா

(வாஷிங்டன்)

ஈராக்கின் வடபகுதியில் விமானப்பறப்பு தடை வலயத்தில் நேற்று முன்தினம் அமெரிக்காவின் இரு எப்- 15 போர் விமானங்கள் தவறுதலாக அமெரிக்காவின் இரு விமானப்படை 'பிளாக் ஹொக்' ஹெலிகப்டர்களை ஏவுகணையால் சுட்டு வீழ்த்தின.

இதனால் அவற்றில் பயணம் செய்த நான்கு நாடுகளின் 26 இராணுவ அதிகாரிகள் பலியாகினர். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், துருக்கி நாடுகளைச் சேர்ந்த இந்த அதிகாரிகளுக்கே இவ் அவல நிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் அதிர்ச்சி தெரிவித்துள்ளார். விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளார் இச்சம்பவத்திற்கு தம் முழுப்பொறுப்பு ஏற்பதாக அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் வில்லியம் பெரி கூறினார் சம்பவத்திற்கு காரணமான விமானிகள் விசாரணைக்குள்ளாக்கப் படவுள்ளனர்.

விமானிகள் தாம் இரு ஹெலிகப்டர்களையும் ஈராக்கின் தாக்குதல் ஹெலிகப்டர்கள் என எண்ணி தாக்குதல் நடத்தியதாக தெரிவித்துள்ளனர். எனினும் ஈராக்கின் தாக்குதல் ரக ஹெலிகப்டருக்கும் அமெரிக்காவின் பிளாக் ஹொக் ரக இராணுவ போக்குவரத்து ஹெலிகப்டருக்கும் இடையே வேறுபாடுகள் தெளிவாக புலப்படக்கூடியவை என இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினர்.

### மேநாளை

எதற்கான ஆயுதமேந்தலையும், களப்பலியாகிய தற்கொடையாளிகளையும், பேரினவாதம் விளைவிக்கும் அவலங்களையும், எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கான சகல சமூக, அரசியல், பொருண்மிய அடிக்கட்டுமானங்களையும் பிரதிபலிக்க வேண்டும்.

எழுச்சிமிக்க பேரணியில் ஊர்திகள் அணிவகுப்பு வழமைபோல் இடம்பெறும். ஊர்திகளை சமகால நிகழ்வுகளை வெளிக்கொணரும் முகமாக அமைக்க வேண்டும் என்பதில் வெகுஜன அமைப்புகள் அக்கறை கொண்டுள்ளன.

தமிழீழ போராட்ட வரலாறு, பேரினவாத கொடூரங்கள் மத்தியிலும் உழைக்கும் மக்களது வலுமிக்க செயற்பாடுகள், எதிரியின் பொருளாதாரத்தடையை தோல்வியுறச் செய்தல், அரசியல், சமூக, பொருண்மிய மேம்பாட்டில் உழைக்கும் மக்களது செயலாற்றல், மாவீரரது தியாகங்கள், தேசிய விடுதலைப் போராட்டத்தினூடாக பேதங்களற்ற, பெண் விடுதலையை முழுமை பெறச் செய்யும் சமுதாயத்தை உருவாக்கல், கல்வியில் மேம்பாடடைதல், தேசிய விடுதலைப் போராட்டத்தில் மக்கள் எழுச்சியின் அவசியம், விடுதலைப் போராட்டத்தில் மனதைத் தொடும் சம்பவங்கள்.

மேற்கூறியவற்றை பிரதிபலிக்கின்ற ஊர்திகள், உயரம் 12 அடி, அகலம் 11 அடி, நீளம் 22 அடிக்குட்பட்ட அமைப்பு அளவுகளை கொண்டவையாக விளங்கும். தயாரிக்கப்படும் ஊர்திகளைப் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்க கோட்ட வட்டப் பொறுப்பாளருடாக ஊர்திகளை அமைப்பவர்கள் இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்டக் கலை பண்பாட்டுக் கழகத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். ஊர்தியின் அமைப்பாளர்களது பெயர் விபரங்கள் தெளிவாக ஊர்திகளின் முன்னும், பின்னும் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். சிறந்த தரமான ஊர்திகளின் பரிசுகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி

## பதிவு செய்யாத மாணவர்கள் இடத்திற்கு புதியவர்கள்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் இன்னும் பல்கலைக்கழகங்களில் பதிவுகளை மேற்கொள்ளவில்லையென்றும் இவர்களின் இடத்திற்கு புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதாக பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பல்கலைக்கழக கல்வியாண்டு 1992/1993க்குரிய மாணவர்களே தமது பதிவுகளை இதுவரை மேற்கொள்ளவில்லை என மேலும் தெரிய வருகின்றது.

## களனி பல்கலை மாணவர் பஸ்ஸிற்கு தீ வைப்பு

(கொழும்பு)

களனி பல்கலைக்கழக மாணவர் பயணிகள் பஸ் ஒன்றைத் தீ வைத்துக் கொளுத்தினர். கொழும்பு - கண்டி வீதியில் களனி பல்கலைக்கழகத்துக்கு முன்பாக மாணவி ஒருவர் மீது பஸ் ஒன்று மோதியதால் ஆத்திரமடைந்த மாணவர் பஸ்ஸுக்குத் தீவைத்தனர்.

பாரிய காயங்களுக்கு உள்ளான மாணவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆத்திரமடைந்த மாணவர் பஸ்ஸை ஸ்தலத்தை விட்டு கீழாகப் புரட்டி பஸ்ஸுக்குத் தீ வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டுறவு சங்கத்தில் வர்த்தக மோசடி அம்பலம்

பனங்காமம் பற்று பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் சோமசுந்தரம் குணரட்ணம் பொது முகாமையாளரின் மேற்பார்வையில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தில் கந்தையா குலசிங்கம் என்பவர் 30-11- 93-ம் திகதிக்கும், 04-03- 94-ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் பொருள்கள் சோர்வாக 58, 982 86 சதத்தை வர்த்தக மோசடி செய்ததாகவும் அதே கூட்டுறவு சங்கத்தில் சுப்பிரமணியம் சேகீஸ்வரராசா என்பவர் அதே காலப்பகுதிக்குள் வைரவப்பிள்ளை குணசிங்கம் பொருள் சோர்வாக 43, 464; 79 சதத்தை வர்த்தக மோசடி செய்ததாகவும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் தமிழீழ காவல் துறையினரால் தமிழீழ சட்டக்கோவை பக்கம் 34 பிரிவு 5-ன் படி குற்றம் சுமத்தப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி கோ. ஜனன் முன்னிலையில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் குற்ற ஒப்பு

# சேவைக்காலபயிற்சி வகுப்பு நாளை முதல் ஆரம்பம்

மரவேலை, உலோகவேலை, நெசவு, வனைதல், மோட்டார் பொறித்தொழில், வானொலி பேணல் போன்ற பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான முதலாம் தவணைக்குரிய சேவைக்கால பயிற்சி வகுப்புகள் நாளை ஆரம்பமாகவுள்ளதாக யாழ்ப்பாண பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள மேற்படி பயிற்சிகளில் ஆசிரியர்கள் பங்கு பெறலாம் எனவும், இப்பயிற்சி எதிர்வரும் வியாழக்கிழமை வரை காலை 8-30 தொடக்கம் மாலை 4-30 மணி வரை நடைபெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான வாழ்க்கைத்திறன் கல்விப் பயிற்சி எதிர்வரும் 23, 24, 25 ஆம் திகதிகளில் கண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## நான்கு கை, கால்களுடன் விசித்திர பெண் குழந்தை

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அதிகாலை நான்கு கைகள், நான்கு கால்களுடன் ஒரு விசித்திர பெண்குழந்தை ஒன்று பிறந்தது இக்குழந்தை ஒரு மணித்தியாலங்களின் பின்னர் இறந்துள்ளது. இந்த அதிசயக் குழந்தையை பார்ப்பதற்கு பலர் நேற்று முன்தினம் வைத்தியசாலைக்கு திரண்டிருந்தனர்.

முனை மணல் ஒழுங்கையைச் சேர்ந்த இளம் குடும்பத்தினருக்கே இக்குழந்தை பிறந்தது. நேற்று முன்தினம் நண்பகல் அளவில் இக்குழந்தை அடக்கம் செய்யப்பட்டது. (லோ)

### குருநகரில்

மேற்படி எறிகணை ஒரு தென்னை மரத்தில் மோதி வெடித்ததாக காயமடைந்தவர்களில் இவர் தெரிவித்தனர். (இ), (நி)

### தொழிலாளர்

இடம் பெயர்ந்து சங்கானையில் வசித்துவந்த சந்தியா பாக்கியநாதன் (வயது 56) என்பவரே இவ்வாறு பலியானவராவார். இவர் இப்பகுதியில் வழமையாக சீவல்தொழிலில் ஈடுபட்டு வந்தவரென தெரியவருகின்றது. (கி)

## சான்றிதழ் வழங்குதல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனத்தின் அனுசரணையுடன் கூட்டுறவுத்திணைக்களமும் யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபையும் இணைந்து நடாத்திய முகாமைப் பயிற்சி கருத்தரங்கில் கலந்து கொண்ட பொது முகாமையாளர், கணக்காளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று காலை 10 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு- வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும்.


## மரண அறிவித்தல்

### கார்த்திப்பிள்ளை கனகசபை

(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)

சாவகச்சேரியை வதிவிடமாகவும் அல்வாயைப் பிறப்பிடமாகவும் கொண்ட கார்த்திப்பிள்ளை கனகசபை 15. 4. 1994-ல் காலமானார். அன்னார் வள்ளியம்மையின் அன்புக்கணவரும், காலம் சென்ற ஞானச்சந்திரன் (முன்னாள் அரச அதிபர் முல்லைத்தீவு), பாலச்சந்திரன் (ஓய்வு பெற்ற அதிபர் டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி), திருமதி யோகேஸ்வரி பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற ஆசிரியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி), திருமதி புவனேஸ்வரி நடராசா, காலஞ்சென்ற மனோச்சந்திரன் (லண்டன்), பூரணச்சந்திரன் (பிராந்திய இயக்குநர் புறோமோகிடோல் என்

நிர்வாகம்
நோயாளர் நலன்புரிச் சங்கம்
(8047) யாழ் போதனா மருத்துவமனை

---

உ
சிவமயம்

## திருநெல்வேலி - அரசடி
### அருள்மிகு
## ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ விழா பின்வரும் திகதிகளில் மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்குத் திருவருள் கைகூடியுள்ளதென்பதை அறியத்தருகின்றோம்.

கொடியேற்றம்: 16-04-1994 சனிக்கிழமை
தேர்த்திருவிழா: 24-04-1994 ஞாயிற்றுக்கிழமை
தீர்த்தோற்சவம் 25-04-1994 திங்கட்கிழமை

இவ்வாலயத்தில் 11-04-1994 திங்கட்கிழமை நடைபெற்ற முதலாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ள நிர்வாக சபை உறுப்பினர்களின் விபரம் பின்வருமாறு:

தலைவர்: திரு. அ. முத்துக்கிருஷ்ணன்
செயலாளர்: திரு. ந. ஜெயந்திலகன்
பொருளாளர்: திரு. அ. இ. சுரேஸ்
உப தலைவர்: திரு. கா. சி. நடராசா
உபசெயலாளர்: திரு. இ. இராஜேஸ்வரன்
உறுப்பினர்கள்: திரு. ம. பாலசுப்பிரமணியம்
திரு. ந. கனகரத்தினம்
திரு. ப. திருநாவுக்கரசு
திரு. ஆ. செல்லத்துரை
திரு. அ. சூரியகுமார்
திரு. க. அருணாசலம்
திரு. க. சிவகுமார்
டாக்டர் இ. சிவசங்கர்
திருமதி சிவகாமசுந்தரி சண்முகராசா
திருமதி ஹேமா குணபாலன்

நன்றி

இங்ஙனம்
திருநெல்வேலி. நிர்வாகசபை
15-4-1994 அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி
(கி-9167) அம்பாள் ஆலயம்

---

மான ஊர்திகளின் பரிசுகள் வழங்கப்படும்.

---

### குடும்ப

மருதங்கேணி, சாவகச்சேரி, கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பருத்தித் துறை இறங்கு துறையிலும் ஏனையவை புனர்வாழ்வு களஞ்சியத்திலும் தமக்குரிய மண்ணெயைப் பெற்று விநியோகிக்கும் படி கேட்கப்பட்டுள்ளனர்.

---

### மாகோ

சக்கர வண்டிகள், யாழ். போதனா வைத்தியசாலைக்கு நானாவித பொருள்களும் வந்துள்ளன.

'மாகோ' கப்பலில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 4620பரல் மண்ணெய் கச்சேரி உத்தியோகஸ்தர்களுக்கு 50 பரல் மண்ணெய், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு எரிபொருள்கள், மானிப்பாய் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றிற்கு ஒரு ஜெனரேட்டரும் வந்தன. இரண்டு கப்பல்களிலும் தபால் பொதிகள் எதுவும் எடுத்துவரப்படவில்லை.

(யோ)

---

### றுகுணு

பருத்தித்துறை துறைமுகம் செல்ல அனுமதித்ததாகம் சொல்லப்பட்டது. இதனை அடுத்து புறப்பட்ட கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு எதுவித சோதனையும் செய்யப்படாத வகையில் வந்து சேர்ந்தது. (யோ)

---

### வடக்கு

649,480 மாணவர்களுக்கு 1859 பாடசாலைகள் உள்ளன. 20,144 ஆசிரியர்கள் இம் மாகாணங்களில் சேவையாற்றுகின்றனர் எனத் தரவுகள் தெரிவிக்கின்றன.

---

...று சங்கத்தில் சுப்பிரமணியம் கேதீஸ்வரராசா என்பவர் அதேகாலப்பகுதியில்பொருள் சேர்வாக ரூபா 59,947.53 சதத்தை வர்த்தக மோசடி செய்ததாகவும் செல்லையா இலதாசன் அதே கூட்டுறவுச் சங்கத்தில் மேற் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பொருள் சேர்வாக 31,404.72 சதத்தை வர்த்தக மோசடி செய்ததாகவும் அதே கூட்டுறவுச் சங்கத்தில்

...ணியில் குற்றம் சுமத்தப் பட்டவர்கள் குற்ற ஒப்புதலை செய்ததையடுத்து தமிழீழ சட்டக்கோவை பக்கம் 34 பிரிவு 5-ன் பிரகாரம் மோசடியின் இருமடங்கு அபராதம் செலுத்த வேண்டும் என்றும் மன்றின் தற்துணியின் பிரகாரம் மோசடி செய்யப்பட்ட பணத்தை குறித்த கூட்டுறவுச் சங்கத்திற்கு இழப்பீடாக செலுத்தும்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

---

ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி
நிதிக்காக

## "ராசி சில்க்ஸ்"

ஆதரவில் மின்னொளியில் மிளிரப்போகும்
உதைபந்தாட்டம்

# 3-வது இடத்திற்கான
# ஆட்டம் - 1994

இடம்: பரியோவான் கல்லூரி மைதானம்
காலம்:- 16-04-94
நேரம்:- இரவு 7.15 மணி
சிறப்பு விருந்தினர்:- எஸ். கணேசரட்ணம்
(வைத்திய நிபுணர் அறுவைச் சிகிச்சை யாழ். போதனா (பொது) வைத்தியசாலை யாழ்ப்பாணம்)

பங்கு பற்றும் அணிகள்:
சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் எதிர்
வதிரி டயமன் விளையாட்டுக்கழகம்

பிரவேசம் ரூபா 25.00
சிறுவர்களுக்கு மட்டும் ரூபா 10.00

18-04-1994 இறுதி ஆட்டம் இடம்பெறும்
யாழ் பல்கலைக் கழகம் எதிர்
சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம்
(கி-9041)

---

...மனோச்சந்திரன் (லண்டன்), பூரணச்சந்திரன் (பிராந்திய இயக்குநர் புறோமோஷோஸ் எஞ்ஜினியரிங் கொம்பனி) ஆகியோரின் தந்தையும், காலம் சென்ற பாலசுப்பிரமணியம் (பொறியியலாளர் மின்சார சபை), கலாநிதி நாகராசா (விவசாய ஆராய்ச்சியாளர் கண்டி), சரோஜினிதேவி, சாரதாதேவி, மணிமேகலாதேவி, சோதிலக்சுமி ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இல. 49, விதானையார் வீதி, சுண்டிக்குளி இல்லத்தில் இருந்து 16.4.1994 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்று துண்டி மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
க. பூரணச்சந்திரன் (மகன்)
இல. 49, விதானையார் வீதி,
சுண்டிக்குளி.
(8046)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
13 - 6 - 1947

இறப்பு:
17 - 3 - 1994

### டானியல் அன்ரனி

எம்மை விட்டுப் பிரிந்த நாட்களோ முப்பத்தொரு
நாட்கள் ஆகிவிட்டபோதும்
உமது புன்சிரிப்பும் பாசமும் எங்கள்
நெஞ்சங்களில் என்றும் மறையாது.

பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள்,
தந்தை, தாய், சகோதரர்கள்.

இல. 9, 2-ம் குறுக்கு வீதி,
நாவாந்துறை வடக்கு,
யாழ்ப்பாணம்.
(கி-9169)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.